*26*

# கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை வாழ்வது எவ்வாறு?

## (6:5-14)

*"பரிசுத்தமாகுதல்" பற்றி நமது படிப்பு தொடருகிறது. முந்திய பாடத்தில், நாம் "பிரித்துவைக்கப்படுதல்" என்பதே "பரிசுத்தமாகுதல்" என்பதன் வேர்க்கருத்தாக உள்ளது என்று குறிப்பிட்டோம். ரோமர் 6 மற்றும் 7ல், பரிசுத்தமாகுதல் என்பது தேவனுடைய பரிசுத்த நோக்கங்களுக்காக அவரால் பிரித்தெடுக்கப்படுதல் என்பதுடன் - மற்றும் அதன்பின்பு அதற்கொப்ப* வாழுதல் *என்பது - சேர்ந்துள்ளது. நமது வாழ்வில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தக் கிறிஸ்துவை நாம் அனுமதிக்க வேண்டும்.*[1]

*1 முதல் 4 வரையிலான வசனங்களில் பவுல், நாம் ஞானஸ்நானம் பெறுகிறபோது, நாம் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் பங்குபெறுவதாக வலியுறுத்தினார்:*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனை வரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாம லிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர் களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம் (வசனங்கள் 3, 4).*

*இந்தப்பாடத்தில், நாம் ஞானஸ்நானம் மற்றும் அது தொடர்பான பிறவிஷயங்கள் பற்றிப் பவுல் இன்னும் என்ன கூறினார் என்று காண்போம். நாம் கர்த்தருக்குள் புதிய வாழ்வை வாழ என்ன நமக்கு அவசியப்படுகிறது என்றும் நாம் கற்றுக்கொள்வோம்.*

### நாம் சிலவற்றை *அறிதல்* அவசியமாகிறது[2] (6:5-7)

*கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்வை வாழ்வதற்கு, நாம் சிலவற்றை* அறிதல் *அவசியமாக உள்ளது. 6ம் அதிகாரம் முழுவதிலும், அறிவின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது:*[3]

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாம லிருக்கிறீர்களா? (வசனம் 3).*

> நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் (வசனம் 6).
>
> மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக் கிறோம், மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை (வசனம் 9).
>
> மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும் நீதிக்கேதுவான கீழ்ப் படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமை களாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளா யிருக்கிறீர்களென்று அறியீர்களா? (வசனம் 16).

"உபதேசத்தை" விரும்புவதில்லை என்று சிலர் வலியுறுத்துகின்றனர். "நமக்குத் தேவையானதெல்லாம் ஒழுக்கரீதியான போதனையே" என்று அவர்கள் கூறுகின்றனர். உபதேசம் இல்லாத ஒழுக்கரீதியான போதனை என்பது, வேர்கள் இல்லாத மரம் அல்லது எண்ணெய் இல்லாத விளக்கு போன்றது.[4] கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய ஜீவனை வாழ்வற்கு, நாம் சில விஷயங்களை அறிதல் அவசியமாகிறது. அறியாமையானது ஆற்றலின்மையை விளைவிக்கிறது.

நமது பாடத்திற்கான வேத வசனப்பகுதி 5ம் வசனத்துடன் தொடங்கு கிறது. பவுல் முன்னதாக, நாம் "அவருடைய [கிறிஸ்துவின்] மரணத்திற் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்" (வசனம் 3) என்றும், நாம் "ஞானஸ் நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" என்றும் (வசனம் 4) கூறியிருந்தார். இங்கு அவர், "ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால்[5], அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" என்று கூறினார் (வசனம் 5).

"இணைக்கப்படுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*sumphutos* என்ற) கிரேக்க வார்த்தை, *sun* ("உடன்") மற்றும் *phuo* ("வளர") என்ற சொற்கள் இணைந்த கூட்டுவார்த்தையாகும், இது "ஒன்றாக நடப்பட்ட" என்று அர்த்தப்பட முடியும்.[6] பவுல் தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுதலை, மண்ணிற்குள் ஒரு விதையை நட்டுவைத்தலுடன் ஒப்பிட்டார். ஒரு விதையிலிருந்து புதிய ஜீவன் வருவதற்கு அவ்விதை "மடிய வேண்டும்" (யோவான் 12:24ஐக் காணவும்).

"நாம் அவருடைய [கிறிஸ்துவினுடைய] மரணத்தின் சாயலில் அவருடன் இணைக்கப்பட்டு" இருப்பதால், நமது "நடப்படுதல்" மதிப்புடையதாக உள்ளது. விஷயம் அதுவாக இருப்பதால், "நிச்சயமாகவே நாம் அவரது உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்."[7] கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டபோது, அவரைப்பற்றிய சிலவிஷயங்கள் முன்பு இருந்தது போன்றே இருந்தன. அவர் தமது கரங்களில், ஆணிகளினால் உண்டான துளைகளையும், தமது விலாவில் ஈட்டியால் துளைத்த காயத்தையும் கொண்டிருந்தார் (யோவான் 20:27ஐக் காணவும்), ஆனால் சில விஷயங்கள் வேறுபட்டு இருந்தன: அவர் இனி மரணத்திற்கு உட்படாதிருக்கும் ஒரு புதிய ஜீவனுக்கென்று எழுப்பப்பட்டார் (ரோமர் 6:9). அதுபோலவே நம் ஞானஸ்நானக் கல்லறையிலிருந்து எழுப்பப்படும்போது, சில விஷயங்கள் முன்பு இருந்ததுபோன்றே இருக்கின்றன: எடுத்துக்காட்டாக, நாம் முன்பிருந்த அதே

*நபர்களாக இருக்கிறோம். இருப்பினும், சில விஷயங்கள் வேறுபட்டுள்ளன: இப்போது நாம் கர்த்தருக்குள் புதிய ஜீவனைக் கொண்டுள்ளோம்!*

*பின்வரும் வார்த்தைகளுடன் பவுல் அந்தச் சிந்தனையைத் தொடர்ந்தார்: "நாம் இனிப்பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே" (வசனங்கள் 6, 7). இவ்வசனப்பகுதியில் நாம் அறிய வேண்டிய மூன்று விஷயங்களின் பட்டியலைக் காண்கிறோம்!*

### *இதை அறியுங்கள்: பழைய மனுஷன் சிலுவையிலறையப்பட்டாயிற்று*

*"நம்முடைய பழைய மனுஷன் அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று" நாம் புரிந்துகொள்ள வேண்டும் (வசனம் 6ஆ). ஆங்கிலத்தில் உள்ள* "old self" *என்ற வார்த்தைக்குப்பதிலாகக் கிரேக்க வசனப்பகுதி,* "old man [*palaios* ... *anthropos*]" *என்று அர்த்தப்படுகிறது. தமிழில் பழைய மனுஷன் என்றுள்ளது. விளக்கவுரையாளர்களில் சிலர்,* "old self [man]" *என்பதன்மூலம் பவுல் எதை அர்த்தப்படுத்தினார் என்பது பற்றித் திகைப்படைகின்றனர்; ஆனால் அப்போஸ்தலர் செயல்விளைவில் இச்சொற்றொடரை 8ம் வசனத்தில் விளக்கியுரைத்தார். 6 மற்றும் 8 ஆகிய வசனங்களுக்கிடையில் உள்ள பின்வரும் இணைவைக் கவனியுங்கள்:*

> *"நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டது" (வசனம் 6).*
> *"கிறிஸ்துவுடனேகூட* நாம் *மரித்தோம் ..." (வசனம் 8).*

*"நம்முடைய பழைய மனுஷன்" என்பது, நாம் கிறிஸ்தவர்கள் ஆகு முன்பு* நமது *நிலையைக் குறிக்கிறது.* NEB *வேதாகமத்தில்,* "the man we once were" *என்றுள்ளது.* R. W. *ஜான் ஸ்டாட் என்பவர், "நமது மனமாற்றத்திற்கு முந்திய நிலையிலிருந்த நமது முழு இயல்பும் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டது" என்று எழுதினார்.*[8] *ஒரு தனிநபர் தமது வாழ்வில் நடந்த நிகழ்வுகளை, "கி.மு." (கிறிஸ்துவுக்கு முன்) அல்லது "கி.பி." (கிறிஸ்துவுக்குப் பின்) என்று குறிப்பிட்டார்.*[9]

*"பழைய மனுஷன்" கிறிஸ்துவோடுகூடச்* சிலுவையில் அறையப்பட்டது *- சிலுவையில் ஆணியறையப்பட்டது, மரணதண்டனை விதிக்கப்பட்டது, மரணத்திற்கு உட்படுத்தப்பட்டது! சிலர் தங்கள் கழுத்துக்களில் சங்கிலியை சிலுவையுடன் அணிவதில் அல்லது கட்டிடங்கள்மீது சிலுவைகளைக் கட்டியெழுப்புவதில் மகிழ்வடைகின்றனர். நகைகள்மீது அல்லது கட்டிடங்கள்மீது சிலுவையைக் காட்சிப்படுத்துதல் என்பதல்ல, ஆனால் இருதயத்தில் சிலுவையை நாட்டுதல் - பழைய பாவமனுஷனை மரணம் அடையச் செய்தல் - என்பதே தேவன் விரும்புகிற பதில்செயலாக உள்ளது!*[10]

### *இதை அறியுங்கள்: பாவ சரீரம் ஒழிக்கப்பட்டது*

*"[நம்முடைய] பாவசரீரம் ஒழிந்துபோகும்*பொருட்டாக*" நாம் அவரோடு சிலுவையில் அறையப்பட்டுள்ளோம் (வசனம் 6ஆ). "சரீரம்"* (*soma*) *என்ற*

வார்த்தை, அடுத்த சில அதிகாரங்களில் முக்கியத்துவம் வாய்ந்துள்ளது (6:6, 12, 13; 7:5, 23, 24; 8:10, 13, 23 ஆகிய வசனங்களைக் காணவும்), எனவே வசனத்தை ஆராய்ந்து பார்க்க நாம் தாமதித்தல் அவசியமாகிறது.

பௌதீக உடலானது, தன்னில்தானே *நல்லதாகவோ அல்லது பொல்லாததாகவோ* இருப்பதில்லை; அது பயன்படுத்தப்படக்கூடிய ஒரு கருவியாக மாத்திரம் உள்ளது. அது, உளப்பதிவுகள் மற்றும் வெளிப்பாடுகள் ஆகியவற்றின் ஊடகம் என்று அழைக்கப்பட்டுள்ளது. உடலின் ஐம்புலன்கள் மூலமாகவே நாம் நம்மைச் சுற்றிலுமுள்ள உலகம் பற்றிய நமது உளப்பதிவுகளைப் பெறுகிறோம். பின்பு, நாம் எவ்வாறு உணருகிறோம் மற்றும்/அல்லது பிறர் எவற்றை அறியவேண்டும் என்று நாம் விரும்புகிறோம் என்பவற்றை (பேச்சு, சைகைகள் மற்றும் முகபாவனைகள் போன்ற) உடலின் பணிகள் மூலமாக நாம் வெளிப் படுத்துகிறோம்.

உடலானது *நன்மைக்கான* கருவியாகப் பயன்படுத்தப்பட முடியும். 13ம் வசனத்தில், பவுல் தமது வாசகர்களுக்கு, அவர்கள் தங்கள் அவயவங்களை "நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு" ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார். ரோமருக்கு எழுதிய நிருபத்தின் பிற்பகுதி யில் இந்த அப்போஸ்தலர், "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று எழுதினார் (ரோமர் 12:1).

உடலானது *பொல்லாங்கிற்கான* கருவியாகவும் பயன்படுத்தப்பட முடியும். அதன் அவயவங்கள் "அநீதியின் ஆயுதங்களாக" பயன்படுத்தப்பட முடியும் (வசனம் 13). வேதவாக்கியங்கள், உடலானது (மாம்சம்) சோதனையைப் பொறுத்தமட்டில் எதிர்ப்புசக்தியின் மிகப்பலவீனமான இடமாக அடிக்கடி உள்ளது என்று ஒப்புக்கொள்கின்றன (7:5ஐக் காணவும்). இது மீண்டும் மீண்டும் சாத்தானுடைய பலத்த தாக்குதல்கள் சிலவற்றிற்கு உட்படுத்தப்படுகிறது. ஆகையால், ரோமருக்கு எழுதிய நிருபத்தில் "சரீரம்" என்ற வார்த்தையானது, பொல்லாங்கிற்கான அதன் பயன்பாட்டைப் பிரதிபலிக்கும் சொற்றொடர்களுடன் அடிக்கடி இணைக்கப்படுகிறது (7:24ஐக் காணவும்). "நம்முடைய பாவமனுஷன்" - அதாவது, நாம் பாவம் செய்ய மூல ஆதாரமாக உள்ள உடல் - என்பதைப் பற்றிப் பேசும் 6ம் வசனத்திலும் விஷயம் அப்படியாகவே உள்ளது.

8:13ல், பவுல் தேவனுடைய ஆவியானவரின் உதவியுடன், நாம் நமது சரீரத்தின் செய்கைகளை மரணத்திற்கு உட்படுத்த முடியும் என்று கூறினார். இருப்பினும், இப்போதைக்கு அவர் நமது பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டது என்பதை மாத்திரம் வலியுறுத்தினார் (6இ). "ஒழிந்துபோகும்பொருட்டாக" என்பது *katargeo* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது *kata* என்பதுடன் "செயலற்ற" (என்பதற்கான *argos* என்ற) வார்த்தைக்குப் பலம் தருவதாக உள்ளது. *Katargeo* என்றால் "செயலற்றதன்மைக்குக் குறைக்கப்பட்டு" இருத்தல் என்று அர்த்தப்படுகிறது.[11] என்னிடமுள்ள NASB வேதாகமப்பிரதியில் பின்வரும் மாற்று வாசிப்பு இடம்பெற்றுள்ளது: "made powerless" ["வல்லமையற்ற

நிலை உண்டாக்கப்படுதல்”]. சிலர், தாங்கள் தங்கள் சரீர இச்சைகளின்மீது சிறிதளவே கட்டுப்பாடு கொண்டுள்ளதாகவோ அல்லது கட்டுப்பாடு எதையும் கொண்டிராததாகவோ நினைக்கின்றனர். அந்த உள்ளான விருப்பங்கள் யாவும் கிறிஸ்துவின் மூலமாக செயலற்றவைகளாக்கப்பட முடியும் என்பதையும் நம்மை மூழ்கடிக்கச்செய்யும் அவற்றின் வல்லமையை நீக்கிப்போடமுடியும் என்பதையும் நாம் அறியவேண்டும் என்று பவுல் விரும்பினார்.

**இதை அறியுங்கள்: பாவத்திற்கு அடிமையாயிருந்தது முடிவுக்கு வந்துள்ளது**

இயேசுவினிமித்தம், பாவத்திற்கு நாம் அடிமையாயிருந்தது முடிவுக்கு வந்துள்ளது. நமது பாவசரீரம் “நாம் இனிப் பாவத்திற்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு” (அடிமைகளாயிராதபடிக்கு) அசைவற்றுப் போகச் செய்யப்பட்டது (வசனம் 6அ). அமெரிக்க நாட்டில், 1863ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் தேதியன்று, சுதந்தர அறிக்கை அறிவிக்கப்பட்டது; பின்பு 1865ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் தேதி அமெரிக்க சட்டத்தின் பதிமூன்றாவது பிரிவு அலுவலகரீதியாக தழுவிக்கொள்ளப்பட்டு, அடிமைத்தளையை முற்றிலுமாக நீக்கிப்போட்டது. பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு, கிறிஸ்து செயல் விளைவில் நமது *ஆவிக்குரிய* “விடுதலை அறிவிப்பில்” தமது சொந்த இரத்தத்தைக் கொண்டு கையெழுத்திட்டார்.

பாவம் என்பது ஒரு அரசனைப் போன்று ஆளுகை செய்கிறது என்று பவுல் குறிப்பிட்டிருந்தாலும் (5:21), இனியும் பாவத்திற்கு மண்டியிட்டிருப்பதற்கான காரணம் எதுவும் இல்லை என்று அவர் கூறினார். கிறிஸ்தவர்கள் அதன் ஆணைக்குக் கீழ்ப்படியத் தேவையில்லை, “[ஏனெனில்] மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்[12]பட்டிருக்கிறானே” (6:7). புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், அடிமைகள் மிக அரிதாகவே விடுவிக்கப்பட்டனர். பல அடிமைகளுக்கு, *மரித்தல்* என்பதே அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகக்கூடிய ஒரே வழியாக இருந்தது. நாம் ஞானஸ்நானம் பெறும்போது, நாம் பாவத்திற்கு மரிக்கிறோம் (வசனம் 2; வசனங்கள் 3, 4ஐக் காணவும்), இது நம்மைப் பாவத்திலிருந்து விடுதலையாக்குகிறது (வசனம் 7). “மரணமானது எல்லாக் கடன்களையும் நீக்கிப் போடுகிறது” என்று இரபீக்கள் போதித்தனர்.[13] நாம் பாவத்திற்கு மரிக்கும்போது, நாம் பாவத்திற்கு ஊழியம் செய்ய இனியும் கடன் எதுவும் கொண்டிருப்பதில்லை.

அமெரிக்க ஐக்கிய நாட்டில், அடிமைகள் விடுவிக்கப்பட்டபோது, அவர்களில் சிலர் தொடர்ந்து அடிமைகளாகவே வாழ்ந்தனர். “ஒன்று அவர்கள் தாங்கள் விடுவிக்கப்பட்டதை நம்ப இயலாதிருந்தனர், அல்லது அவர்கள் விடுதலையைக் கற்பனை செய்ய இயலாத அளவுக்கு அடிமைத்தனத்திற்குப் பழக்கப்பட்டுப் போயிருந்தனர்.”[14] பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்களில் சிலர் இன்னமும் அந்த அடிமைத்தனத்திலேயே வாழ்ந்து வருகின்றனர் என்பது கவலைக்குரியதாகும். எல்லாக் கிறிஸ்தவர்களும் தாங்கள் இனிப் பாவத்திற்கு அடிமைகள் அல்ல என்றும், இனியும் “பாவத்திற்கு ஊழியம்” செய்தல் என்பது தேவையற்றது என்றும் அறிந்திருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார் (6:6).

## *நாம் சிலவற்றை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது (6:8-11)*

*கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்வதற்கு, அடுத்து நாம் சிலவற்றை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. "எண்ணிப் பார்த்தல்" என்ற வார்த்தை 11ம் வசனத்தில் காணப்படுகிறது: "அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்." 5 முதல் 7 வரையுள்ள வசனங்களில் பாவத்திற்கு மரித்தல் என்பது வலியுறுத்தம் செய்யப்பட்டுள்ளது. 8 முதல் 11 வரையுள்ள வசனங்கள், நாம் பாவத்திற்கு மரித்துள்ளோம் என்பதைத் திரும்பவும் குறிப்பிடுகின்றன, ஆனால் தேவனுக் கென்று பிழைத்திருத்தல் என்பதே இங்கு வலியுறுத்தம் செய்யப்பட்டுள்ளது.*

*"ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்" (வசனம் 8). நாம் "அவருடைய [கிறிஸ்துவினுடைய] மரணத்திற்குள் ஞானஸ்நானம்" பெற்றபோது நாம் "கிறிஸ்துவுடனே மரித்தோம்" (வசனம் 3). "நாம் புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்ளும்படிக்கு" தண்ணீர்க்கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டுள்ளதால், "நாம் அவருடனேகூடப் பிழைப்போம் என்று நம்பியிருக்கிறோம்" (வசனம் 4).*

*அடுத்ததாகப் பவுல், "மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்ப தில்லையென்று அறிந்திருக்கிறோம்" என்று கூறினார் (வசனம் 9அ). நூற்றாண்டுகளினூடே பலர் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு இருந்தனர்; ஆனால் கிறிஸ்து மாத்திரமே "மீண்டும் ஒருக்காலும் மரியாதிருக்கும்படி" உயிர்த்தெழுந்தார். அவர் பூமியிலிருந்து நேரடியாகத் தேவனுடைய சிங்காசனத் திற்கு எழுந்தருளிச் சென்றார் (நடபடிகள் 1:9; 2:33, 34).*

*இதன் விளைவாக, "மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை" (வசனம் 9ஆ). கிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்தபோது, அவர் "மனுஷர் சாயலானார்" (பிலிப்பியர் 2:7). அவர் மாம்சமானார் (யோவான் 1:14). ஆகையால், மாம் சத்தின் பலவீனங்களுக்கும், எல்லைகளுக்கும் - மரணம் உட்பட கீழ்ப்பட்டிருந்தார். அவர் "மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும்" கொண்டு வந்தார். (2:8). இருப்பினும், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபோது, "அவரைத் தொடுவதற்கான மரணத்தின் வல்லமை முடிந்து போயிற்று" (ரோமர் 6:9ஆ).*

*10ம் வசனத்தில், நாம் இயேசுவின் மரணத்திற்கும் அவரது உயிர்த்தெழுந்த ஜீவனுக்குமிடையில் நேர்மாறு ஒன்றைக் கண்டறிகிறோம். இவ்வசனம் முதலாவதாக, "அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்" என்று கூறுகிறது. "ஒரேதரம்" என்பது ephapax என்பதன் மொழிபெயர்ப்பாகும், இது epi ("மீது") என்பதால் பலப்படுத்தப்பட்ட hapax ("ஒருதரம்") என்பதிலிருந்து வருவதாக உள்ளது. Ephapax என்பது, "ஒரேதரமாக" செய்யப்பட்ட ஒரு செயலை அதாவது, "முழுமையான மதிப்புடைய திரும்பச் செய்தல் அவசியப்படாத ஒரு செயலை" குறிக்கிறது.[15] இவ்வார்த்தையானது, கர்த்தர் திரும்பவும் மரிக்கத் தேவையில்லை என்பதை மாத்திரம் வலியுறுத்துவதாக இருக்க முடியும். இதே கருத்தில்தான் இவ்வார்த்தை எபிரெயர் 7:27லும் பயன்படுத்தப்பட்டுள்ளது எனலாம். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், மிருகபலிகள் திரும்பத் திரும்ப செலுத்தப்பட வேண்டியிருந்தன, ஆனால் இயேசுவின் பலியானது ஒரேதரம்*

செலுத்தப்பட்டதாக இருந்தது என்று சுட்டிக்காண்பித்தார். அது எல்லா மக்களுக்காகவும் எல்லாக் காலத்திற்காகவும் ஆனதாக இருந்தது (எபிரெயர் 9:24-28ஐக் காணவும்).

பவுல் கூடுதலாக, "அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்" என்றும் கூறினார் (வசனம் 10ஆ). பிரிவு என்பது "மரணம்" என்பதன் வேர்க்கருத்தாக இருப்பதால், "ஜீவன்" என்பதை நாம் ஐக்கியம் என்பதாக நினைக்கலாம்: ஆவிக்குரிய ஜீவன் கொண்டிருத்தல் என்பது தேவனுடன் நெருக்கமாயிருத்தல் என்பதாக உள்ளது (யோவான் 17:3ஐக் காணவும்). இவ்வாறு AB வேதாகமமானது 10ம் வசனத்தின் பிற்பகுதியைப் பின்வருமாறு விரித்துரைக்கிறது: "He is living to God [in unbroken fellowship with Him]" {"அவர் தேவனுக்கென்று [முறிக்கப்பட இயலாத ஐக்கியத்தில் அவருடன்] வாழ்கிறார்"}. இயேசு மனிதர்களின் பயனுக்காக மரித்தார், ஆனால் இப்போது அவர் தமது பிதாவுடன் அவரை மகிமைப்படுத்துவதற்கென்றே ஜீவிக்கிறார்.

**இதைப்பற்றி எண்ணிப்பாருங்கள்: நீங்கள் மரித்திருக்கிறீர்கள்**

அது நம்மை, கிறிஸ்தவர்கள் "எண்ணிப்பார்க்க" தேவையான ஒரு விஷயத்தினிடம் கொண்டு வருகிறது. பவுல், இயேசுவின் உதாரணத்தைச் சிந்தையில் கொண்டவராக, "நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும் … எண்ணிக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (வசனம் 11அ). "எண்ணிக்கொள்ளுதல்" என்பது *logizomai* என்ற வார்த்தையிலிருந்து வருவதாக உள்ளது, இது 4ம் அதிகாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்த கணக்கியல் சொற்றொடராகும். பவுல் தமது வாசகர்கள், தங்கள் சிந்தைகளில் குறிப்பிட்ட சில சத்தியங்களை "குறித்து வைத்துக்"கொள்ள வேண்டும் என்று கூறினார். குறிப்பிட்ட சில உண்மைகளை வெறுமனே *அறிந்திருத்தல்* மாத்திரம் போதுமானதல்ல; அவர்கள் அந்த உண்மைகளை *எண்ணிப்பார்த்து,* அவற்றின் முழு மறைகருத்துக்கள் பற்றிக் கவனமாய் நினைத்துப்பார்த்தல் அவசியமாயிருந்தது.

பவுல் தமது வாசகர்கள் இரண்டு வலிவார்ந்த உண்மைகளைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும் என்று விரும்பினார். முதலாவது, அவர்கள் உண்மையிலேயே "பாவத்திற்கு மரித்திருந்தனர்" என்பதாக இருந்தது. அவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது பாவத்திற்கு மரித்திருந்தார்கள் (வசனங்கள் 2-5), ஆனால் அந்த உண்மைநிலையின் எல்லா அர்த்தங்களையும் அவர்கள் புரிந்துகொள்ளாதிருக்கலாம்.

**இதைப்பற்றி எண்ணிப்பாருங்கள்: நீங்கள் பிழைத்திருக்கிறீர்கள்**

இருப்பினும், அவர்கள் தங்களை மரித்தவர்களாக மாத்திரமல்ல, ஆனால் "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுக்கென்று *பிழைத்திருக்கிறவர்களாகவும்*" எண்ணிக்கொள்ள வேண்டியிருந்தது (வசனம் 11ஆ). அமெரிக்க நாட்டின் பழைய மேற்குப்பகுதியில், "தேடப்படுகிறவர்கள்" பற்றிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன, அவை சட்டத்திற்கு விரோதமான அபாயமானவர்களைப் பிடித்துக்கொடுத்தால் வெகுமதி கிடைக்கும் என்று கூறின. சிலவேளைகளில் அந்த சுவரொட்டிகளில், "தேவை: உயிருடனோ அல்லது பிணமாகவோ" என்று கூறப்பட்டிருந்தது. ரோமருக்கு எழுதிய நிருபத்திற்கு ஜிம் டவுன்செண்ட் என்பவர் எழுதிய விளக்கவுரையில், நாம் படித்துக்கொண்டிருக்கும் இப்பகுதிக்கு அவர்

“தேவை: மரித்த நிலையில் *மற்றும்* உயிருடன்” என்று தலைப்பிட்டிருந்தார்.[16] தேவன் நம்மை “மரித்தவர்களாக” மாத்திரம் விரும்புவதில்லை; அவர் நம்மை “பிழைத்திருக்கிறவர்களாக” இருக்கும்படிக்கும் விரும்புகிறார். நாம் “பாவத்திற்கு மரித்தவர்களாக” மாத்திரமல்ல, ஆனால் “தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும்” இருக்க வேண்டும்.

| பழைய மனுஷன் | புதிய மனுஷன் |
|---|---|
| பாவத்திற்குப் பிழைத்திருத்தல் | தேவனுக்கென்று பிழைத்திருத்தல் |
| தேவனுக்கு மரித்திருத்தல் | பாவத்திற்கு மரித்திருத்தல் |

“தேவனுக்கென்று பிழைத்திருத்தல்” என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பது பற்றி ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள். நமது சிருஷ்டிகருடன் இப்படிப்பட்ட நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருத்தல் என்பது மாபெரும் ஆசீர்வாதமாக உள்ளது! அதேவேளையில், இது ஒரு மும்முரமான பொறுப்பையும் நமக்கு அளிக்கிறது. “அவருடன் முறிபடாத ஐக்கியத்தில்” வாழ்வதற்கு (ரோமர் 6:11), நாம் நமது மிகச்சிறந்த திறமையுடன் அவரது சித்தத்தைச் செய்வதற்கு நம்மையே அர்ப்பணிக்க வேண்டும்!

## நாம் சிலவற்றை முன்வைத்தல் அவசியமாயிருக்கிறது (6:12, 13)

நமது வசனப்பகுதியின் மூன்றாவது பிரிவு, ‘‘ஆகையால்’’ என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது (வசனம் 12அ). பவுல் தாம் கூறியிருந்தவற்றிலிருந்து நடைமுறை முடிவுகளைத் தரவழைக்கத் தயாராக இருந்தார், அவரது வாசகர்கள் பாவத்திற்கு மரித்*திருந்தபடியால்,* மற்றும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனுக்கென்று எழுப்பப்பட்டிருந்த*படியால்,* அவர்கள் குறிப்பிட்ட ஒருவழியில் நடந்துகொள்ள வேண்டியிருந்தது.

“ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக” (வசனம் 12). ஜேம்ஸ் R. எட்வர்ட்ஸ் என்பவரின் கருத்துப்படி இது “ரோமருக்கு எழுதிய நிருபத்தில் ஒழுக்கரீதியான முதலாவது புத்திகூறுதலாக” உள்ளது.[17] விசுவாசிகள் தேவபக்தியுள்ள வாழ்வை வாழ வேண்டும் என்பதற்குப் பலத்த மறைமுகக்கருத்துக்களைத் நாம் கண்டிருக்கிறோம் (எடுத்துக்காட்டாக, 2:6-8, 10ஐக் காணவும்), ஆனால் இது தேவன் தம்மைப் பின்பற்றுபவர்களிடத்தில் எதிர்பார்ப்பது என்ன என்பது பற்றிய முதலாவது நேரடியான அறிவுறுத்துதல்களாக உள்ளன.

ரோமர் 6ன் முதல் பகுதியில், பவுல் (“சுட்டிக்காட்டும் உணர்வை” பயன்படுத்தி) கூற்றுக்களை ஏற்படுத்தினார்; இப்போது அவர் (“கட்டளை உணர்வை” பயன்படுத்தி) கட்டளைகளை வெளியிடத் தொடங்கினார். அவர் தன்மையில் (“நாம்” மற்றும் “நமது”) பேசியிருந்தார்; இப்போது அவர் முன்னிலைக்கு (“நீங்கள்”) மாறினார். இங்கு தகவல் தருவதில் அல்ல ஆனால் புத்திகூறுவதிலேயே அவரது வலியுறுத்தமிருந்தது.

"நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" என்பது முதலாவது புத்திகூறுதலாக உள்ளது (வசனங்கள் 12ஆ, இ). கிறிஸ்தவர்கள் "பாவத்திலிருந்து விடுதலையாகியுள்ளனர்" (வசனம் 7), அதாவது அவர்கள் "இனியும் பாவத்திற்கு அடிமைகள் அல்ல" (வசனம் 6) என்ற உண்மையைக் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார். இது, பாவம் இனியும் அச்சுறுத்தல் செலுத்துவதில்லை என்ற மனப்பதிவை விட்டுச்சென்றிருக்கலாம் - ஆனால் விஷயம் அப்படியிருக்கவில்லை. விடுதலைபெற்ற அடிமையொருவர் ஒரு அடிமையாகத் தொடர்ந்து எவ்வாறு நிலைத்திருக்க முடியுமோ, அவ்வாறே, பாவத்தின் தளையிலிருந்து விடுதலையாகியுள்ள ஒருவர் இன்னமும் பாவத்திற்கு ஊழியம் செய்ய முடியும். செயல்விளைவில், பவுல் தமது வாசகர்களிடத்தில், "அது நடக்க அனுமதிக்காதீர்கள்!" என்று வேண்டிக்கேட்டுக்கொண்டார்.

தேவனுக்கோ அல்லது பாவத்திற்கோ ஊழியம் செய்யும்படி நமது சரீரங்களைப் பயன்படுத்துதல் என்ற கருத்தின்மீது பவுல் கவனம்குவித்தார்: "சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" (வசனம் 12ஆ). "சாவுக்கேதுவான" என்பது, "சாவுக்குரிய" என்று அர்த்தப்படும் *thnetos* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. "நாம் பிறந்த நேரத்திலிருந்தே மரிக்கத் தொடங்கிவிடுகிறோம்."

அடுத்ததாக அவர், "நீங்கள் *சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக,* சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" என்று கூறினார் (வசனம் 12ஆ, இ). "இச்சைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது (இது *epithumia* என்பதன் பன்மைப் பதமாகும்) "இருதயம் எதன்மீது அமைவுபெற்றுள்ளதோ அதை" குறிக்கிறது (*epi* ["மீது"] இருந்து கூட்டல் *thumos* ["ஆத்துமா" அல்லது "சிந்தை"]).[19] இவ்வார்த்தையானது நல்ல அல்லது தீய என்ற எவ்வகையிலான விஷயத்தின் மீதான பலத்த விருப்பங்களைக் குறிக்கிறது, ஆனால் இது வழக்கமாகத் தீய விருப்பங்களை ("இச்சைகளை") குறிப்பிடுகிறது.[20]

உணவிற்கான விருப்பம் போன்ற விருப்பங்களைக் கொண்டிருக்கும் வகையிலேயே தேவன் நமது சரீரங்களைப் படைத்தார். நமது நன்மைக்காகவும் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும் அவர் இந்த விருப்பங்களை நமக்குள் வைத்தார். இருப்பினும் தேவனுடைய மற்ற எல்லாக் கொடைகளையும்போலவே, இந்த விருப்பங்களும் தவறாகவும் வீணாகவும் பயன்படுத்தப்பட முடியும். சாத்தான் நமது விருப்பங்களைச் சீர்கேடான வழிகளில், தேவனை வருத்தப்படுத்தும் வழிகளில் திருப்திசெய்துகொள்ளும்படி நம்மை வற்புறுத்துகின்றான். யாக்கோபு, "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்" என்று எழுதினார் (யாக்கோபு 1:14).

சிலர் தங்களின் சரீரப்பிரகாரமான தூண்டுதல்கள் தங்களால் எதிர்த்து நிற்க இயலாத அளவுக்கு மிகப்பலத்தவைகளாக உள்ளன என்று நம்புகின்றனர், ஆனால் விஷயம் அதுவல்ல என்று பவுல் கூறினார். விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் மூலமாக நீங்கள் பாவத்தின் கட்டிலிருந்து விடுவிக்கப்பட்டீர்கள். இப்போது, தேவனுடைய உதவியுடன் (ரோமர் 8:13ஐக் காணவும்) நீங்கள் பாவத்திற்கு "இல்லை" என்று கூறமுடியும். இனியும் "நீங்கள்

சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆள அனுமதிக்கக்கூடாது." நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த பலவீனத்தைக் கொண்டிருக்கிறோம். சிலருக்கு இது மதுபானம் அல்லது போதைப்பொருட்கள் பயன்படுத்தும் பலவீனமாக இருக்கலாம். மற்றவர்களுக்கு இது சட்டவிரோதமான பாலுறவுக்கான பலவீனமாக இருக்கலாம். இது வீண் அலப்புதலின் பலவீனமாக இருக்கலாம். நான் அதிகமான உணவு உண்ணும் பலவீனத்தைக் கொண்டிருக்கிறேன். உங்கள் பலவீனம் எதுவாக இருந்தாலும், அந்த பலவீனத்தில் நீங்கள் உங்களை ஒப்புக்*கொடுத்துவிட வேண்டிய தில்லை* என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்; நீங்கள் "அதன் இச்சைகளுக்கு" கீழ்ப்படிய *வேண்டியதில்லை.* நீங்கள் சோதிக்கப்படும்போது, "சோதனையைத் தாங்கத்தக்கதாக, ... அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும்" தேவன் உங்களுக்கு எப்போதும் கொடுக்கிறார் (1 கொரிந்தியர் 10:13).

**ஒப்புக்*கொடா*தீர்கள் ...**

வசனம் 13அ வில் பவுல் தமது புத்திகூறுதலுடன் பின்வருவதைச் சேர்த்தார்: "நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல்." "ஒப்புக்கொடாமல்" என்பது *paristemi (para* ["பக்கத்தில்"] கூட்டல் *histemi* ["நிற்குதல்"]) என்பதன் ஒரு மாற்று வார்த்தையான *paristano* என்பதிலிருந்து வருகிறது. இது, "முன்வைத்தல் ... , அர்ப்பணித்தல், ... ஒப்புவித்தல்" என்று அர்த்தப்படுகிறது.[21] "உங்கள் சரீரத்தின் அவயவங்கள்" என்பவை கண்கள், காதுகள், வாய், கைகள் மற்றும் பாதங்கள் போன்ற பௌதீக உடலின் பாகங்களேயாகும். இவை ஒவ்வொன்றும் துன்மார்க்கத் திற்கு ஒப்புவிக்கப்படக்கூடும்.[22]

இருப்பினும், நமது உடலைக் கொண்டு மாத்திரமே நாம் பாவம் செய்கிறோம் என்று நினைத்துவிடக்கூடாது; பாவம் நிறைந்த செயல்கள் நமது *இருதயங்களில்தான்* தோன்றுகின்றன (லூக்கா 6:45ஐக் காணவும்). ஆகையால் எட்வர்ட்ஸ் என்பவர், "இந்தக் குறிப்புரையானது ... பௌதீக உடலுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படத் தேவையில்லை, ஏனெனில் இது நிச்சய மாகவே உருவக நடையில், மனித திறமைகள் மற்றும் திறன்கள் யாவற்றையும் உள்ளடக்குகிறது" என்று கருத்துத் தெரிவித்தார்.[23] AB வேதாகமத்தில் 13ம் வசனத்தில், "bodily members [and faculties]" ("உடல் உறுப்புகள் [மற்றும் இயல்புகள்"]) என்றுள்ளது. CJB வேதாகமம், "Do not offer *any part of yourselves* to sin as an instrument for wickedness" ["*உங்களின் எந்த ஒரு பகுதியையும்* துன்மார்க்கத்தின் கருவிகளாகப் பாவத்திற்குக் கையளித்துவிடாதீர்கள்"] என்றுள்ளது.

"ஆயுதங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*hoplon* என்ற) வார்த்தை "கருவி" என்று அர்த்தப்படமுடியும், ஆனால் இந்த சந்தர்ப்பப்பொருளில் இது "அனேகமாக இராணுத்தில் பயன்படும் ஒப்புவமை" என்பதாக உள்ளது என்று W. E. வைன் என்பவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.[24] என்னிடத்தில் உள்ள NASB வேதாகமப் பிரதியில், "ஆயுதங்கள்" என்பதற்குப் பின்வரும் மாற்று வாசிப்பு தரப்பட்டுள்ளது: "Or *weapons*." வேறொரு இடத்தில், பவுல் நாம் ஒரு ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்று வலியுறுத்தினார் (எபேசியர் 6:10-17ஐக் காணவும்). அந்த யுத்தத்தில், ஒன்று நாம் கர்த்தரின் பக்கமாய் இருக்கிறோம் அல்லது நாம் சாத்தானின் பக்கமாய் இருக்கிறோம். நாம் நமது சரீரங்களை

(மற்றும் நமது எல்லா இயல்புகளையும்) துன்மார்க்கத்தினிமித்தம் ஒப்புக்கொடுத்த ஆயுதங்களாகவோ அல்லது நன்மைக்கு ஒப்புக்கொடுத்த ஆயுதங்களாகவோ பயன்படுத்த முடியும்.

***ஒப்புக் கொடுங்கள் ...***

பொல்லாங்கு செய்வதிலிருந்து விலகியிருந்தால் மாத்திரம் போதாது; நாம் நன்மையைச் செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். "தோட்டத்தில் களைகளைப் பறித்தால் மாத்திரம் போதாது; நாம் மலர் அல்லது காய்ச்செடிகளை நடவும் வேண்டும்." இவ்வாறாகப் பவுல், "உங்களை மரித்தோரிலிருந்து பிழைத் திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" என்று கூறினார் (வசனம் 13ஆ). TEV வேதாகமத்தில், "Surrender your whole being to him to be used for righteous purposes" ("உங்கள் முழுமையையும் நீதியின் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும்படி அவருக்கு அர்ப்பணியுங்கள்") என்றுள்ளது.

தேவன் இந்தப்பூமியில் தமது சித்தத்தை நிறைவேற்ற மனிதர்களின் சரீரங்களைப் பயன்படுத்துகின்றார் என்று வில்லியம் பார்க்ளே[25] என்பவர் உற்றுக்கவனித்துள்ளார். அவர் ஒரு வார்த்தை பேசப்பட வேண்டும் என்று விரும்பினால், அதைப்பேச ஒரு மனிதரை அவர் பயன்படுத்துகிறார். அவர் ஒரு செயல் செய்யப்பட வேண்டும் என்று விரும்பினால், அதைச் செய்ய ஒரு தனிநபரை அவர் பயன்படுத்துகிறார். அவர் யாரையேனும் உயர்த்த வேண்டும் என்று விரும்பினால், அவரை ஊக்குவிப்பதற்கு ஒரு நபரை அவர் [தேவன்] பயன்படுத்துகிறார். பவுல் தமது வாசகர்கள் (மற்றும் நாம்), தேவன் இந்தப் பூமியில் தமது நோக்கத்தை நிறைவேற்றப் பயன்படுத்தக்கூடிய வகையிலான மக்களாயிருக்கும்படி வேண்டிக்கொண்டார்.

இந்த அப்போஸ்தலர் தமது வாசகர்களை "மரித்தோரிலிருந்து பிழைத் திருக்கிறவர்கள்" என்று குறிப்பிட்டபோது, ஒரு பலத்த ஊக்குவிப்பை உள்ளடக்கினார். பிலிப்ஸ் என்பவரின் மொழிபெயர்ப்பு வேதாகமத்தில், "like men rescued from certain death" ("ஒரு குறிப்பிட்ட மரணத்திலிருந்து மீட்கப்பட்ட மக்களைப்போல") என்றுள்ளது. நீங்கள் குறிப்பிட்ட மரணத்திலிருந்து மீட்கப்பட்டிருந்தால், உங்கள் பாராட்டுதலை வெளிப்படுத்த நீங்கள் என்ன செய்வதற்கு மனதாயிருப்பீர்கள்? உங்களைக் குறிப்பிட்ட *ஆவிக்குரிய* மரணத்தி லிருந்து மீட்பதற்குத் தேவன் உங்களுக்காக என்ன செய்தார் என்பதை "அறிந்து" அதைப்பற்றி "எண்ணிப்பாருங்கள்." உங்களையே "ஒப்புக்கொடுக்கும்படி [அர்ப்பணிக்கும்படி]" மற்றும் நீங்கள் முற்றிலும் அவருடைய ஊழியத்திற்கென்று இருக்கும்படி கேட்டுக் கொள்ளுதல் மிக அதிகமானதாக உள்ளதா?

## முடிவுரை (6:14)

இந்தப் பகுதியைப் பவுல், 1 முதல் 13 வரையிலான வசனங்களின் கலந் துரையாடலுடைய தொகுப்புரைக்கூற்றுடன், 1ம் வசனத்தின் கேள்விக்குப் பதிலுடன் மற்றும் 6:15-23ல் காணப்படும் விளக்கங்களுக்கு மாறிச்செல் லுதல் ஒன்றுடன் முடித்தார். அந்தக்கூற்று பின்வரும் வார்த்தைகளைக் கொண்டுள்ளது: "பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது" (வசனம் 14ஆ). "மாட்டாது" என்பது, கிறிஸ்தவரின் வாழ்வில் பாவம் கட்டுப்பாடு செலுத்துதல்

இயலாதவிஷயமாக உள்ளது என்று அர்த்தப்படுவதில்லை. அப்படிப்பட்ட விளக்கமானது, பாவம் *செய்யாதிருக்கும்படி* தேவனுடைய பிள்ளைகளை ஊக்குவிப்பதற்கென்று எழுதப்பட்டுள்ள இவ்வசனப்பகுதியின் வலியுறுத்தத்தை அழித்துப்போடுவதாக இருக்கும்.

ஒரு கட்டளையைக் கொடுப்பதற்கு எதிர்கால வினைச்சொல் பயன்படுத்தப்படக்கூடும்.[26] வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "நீங்கள் அதைச்செய்ய *முடியும்*, ஆனால் அதை நீங்கள் செய்தால் *இடர்ப்பாட்டில் அகப்படுவீர்கள்!*" என்று அர்த்தப்படுத்தும்போது, "நீங்கள் அதைச் *செய்யக்கூடாது*" என்று நீங்கள் யாருக்கேனும் கூறலாம். எடுத்துக்காட்டாக, தேவன் ஆதாமினிடத்தில், "ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்" என்று கூறினார் (ஆதியாகமம் 2:17அ). அந்த மரத்தின் கனியை ஆதாம் புசிக்க முடிந்திருந்தது மற்றும் அவன் அவ்வாறே புசித்தான் - மற்றும் அவன் அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டியதாயிற்று.

பவுல், "உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" என்று கூறியபோது, அவர் தமது வாசகர்களுக்குப் பாவத்தின்மீது வெற்றி தரப்பட்டிருந்த காரணத்தால், அவர்கள் தங்களைப் பாவம் ஆளும்படி விடுதல் *தேவையற்றது* என்று உறுதிப்படுத்தினார். அவர், பாவம் அவர்களின் வாழ்வில் ஆதிக்கம் செலுத்த ஒருக்காலும் அனுமதிக்காதிருக்கும்படியும் அவர்களை ஊக்கப்படுத்திக்கொண்டிருந்தார். ஜிம் மெக்கைன் என்பவர், "பாவம் உங்கள் கர்த்தாவாக இராது என்பது உறுதிப்பாடாக மாத்திரமல்ல, ஆனால் அது ஆயுதமேந்துவதற்கான ஒரு அழைப்பாகவும் உள்ளது" என்று எழுதினார்.[27] CEV வேதாகமத்தில், "Don't let sin keep ruling your lives" ["பாவம் உங்கள் வாழ்வில் ஆட்சிசெய்ய அனுமதிக்காதீர்கள்"] என்றுள்ளது.

இந்தப் பகுதியின் கடைசி பாகத்தில், பவுல் தமது வாசகர்களுக்கு, பாவம் *ஏன்* அவர்களின் எஜமானாக இருக்கக்கூடாது என்பது பற்றிக்கூறினார்: "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப் பட்டிருக்கிறபடியால்" (வசனம் 14அ). சிலர் இந்த வார்த்தைகளைச் சந்தர்ப்பப்பொருளிலிருந்து எடுத்துப்போட்டு இவற்றைத் தங்கள் வாழ்விற்கு சுலோகமாக ஏற்படுத்தியுள்ளனர்: "நாம் நியாயப்பிரமாணத்தின்கீழ் அல்ல, ஆனால் கிருபையின்கீழ் இருக்கிறோம்!" டக்ளஸ் J. மூ என்பவர், பவுல் நாம் "நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருப்பதில்லை" என்று கூறியபோது, அவர் "கிறிஸ்தவர்கள் தாங்கள் பொறுப்புக் கொண்டுள்ள கட்டளைகள் எதையும் கொண்டிருப்பதில்லை என்று கூறவில்லை" என்று சுட்டிக்காண்பித்தார்.[28] மாறாக, "நியாயப்பிரமாணம்" என்பது அங்கு "நியாயப்பிரமாண முறைமை" என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுபோலவே இவ்வசனத்தில், "கிருபை" என்பது "கிருபையின் முறைமை" ஒன்றைக் குறிக்கிறது.

நியாயப்பிரமாண முறைமையின்கீழ், பாவத்தினால் ஆதிக்கம் செலுத்தப்படாது இருத்தல் என்பது கடினமானதாக இருந்தது, ஏனென்றால் [பாவத்திலிருந்து] விடுதலை பெற வழியில்லாதிருந்தது. R. C. பெல் என்பவர், "நியாயப்பிரமாணம் கீழ்ப்பட்டிருப்பவர்களையும் அடிமைகளையும் உண்டாகக்கூடியதாக இருந்தது, ஆனால் அது கடின இருதயங்களை மென்மை யாக்கவோ, முரட்டு சுபாவங்களை முறிக்கவோ மற்றும் நன்றியுணர்வையும்

அன்பையும் உருவாக்கவோ கூடாததாக இருந்தது" என்று எழுதினார்.[29] மிகமுக்கியமாக, நியாயப்பிரமாணம் பாவியை நீதிமானாக்க முடியாததாக இருந்தது. நியாயப்பிரமாணம் செய்ய இயலாத எல்லாவற்றையும் கிருபை செய்யக்கூடும். கிருபையின் முறைமையின்கீழ் ஒருவர் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்க முடியும். கிருபையானது, நியாயப்பிரமாணத்தினால் ஒருக்காலும் செய்யப்பட்டிராததான, பாவத்தின் பிடியை முறித்தல் என்ற செயலைச் செய்கிறது. இவ்வாறு, நாம் 1ம் வசனத்தில் மறைமுகமாய் உணர்த்தப்பட்ட குற்றச்சாட்டிற்குப் பதில் ஒன்றைப் பெறுகிறோம்: கிருபையானது பாவம் செய்வதை *ஊக்குவிப்பதற்குப்* பதிலாக, உண்மையில் அதை *ஊக்கமிழக்கச் செய்கிறது.*

நாம் இந்தப் பாடத்தை முடிக்கும் இவ்வேளையில், பின்வரும் கேள்வியைச் சிந்தித்துப் பாருங்கள்: உங்கள்மீது ஆளுகை செலுத்துவது யார் - பாவமா அல்லது தேவனா? இந்தக் கேள்விக்குப் பதில் உங்களுக்குத் தெரியவில்லை என்றால், உங்கள் வாழ்வுப்பாணியை உற்றுக்கவனித்துள்ள யாரேனும் ஒருவரிடத்தில் இதைக் கேட்டு அறியுங்கள். நீங்கள் *வாழும்* வழிமுறையானது, உங்கள் இருதயத்தில் அரியணையிட்டு அமர்ந்திருப்பது யார் அல்லது எது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. உங்கள் வாழ்வில் பாவம் ஆளுகை செய்துகொண்டிருந்தால், உங்களை விடுவிக்கக்கூடியவருக்கு உடனடியாக உங்களை ஒப்புவிக்கும்படி நான் உங்களை வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்!

## பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் குறிப்புகள்

இந்த எடுத்துரைப்பைப் பயன்படுத்தும்போது, கிறிஸ்தரல்லாதவர்கள் எவ்வாறு தங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க முடியும் என்று விளக்கியுரைக்க நீங்கள் விரும்பலாம் (மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:38). தவறிப்போயுள்ள கிறிஸ்தவர்கள் யாரேனும் கூட்டத்திலிருந்தால், அவர்கள் தங்கள் கலகத்தின் கைகளை எவ்வாறு தாழ்த்த முடியும் என்பதையும் கூறுங்கள் (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9).

குறிப்புகள்

[1]Fritz Ridenour, ed., *How to Be a Christian Without Being Religious* (Glendale, Calif.: Regal Books, G/L Publications, 1967), 51. [2]பல எழுத்தாளர்கள், ரோமர் 6ன் மீதான தங்கள் சிந்தனைகளை, "அறிதல்," "கருதுதல்," மற்றும் "முன்வைத்தல்" என்று மூன்று வார்த்தைகளில் மையப்படுத்தி இருக்கின்றனர். [3]இந்த வலியுறுத்தம் 7ம் அதிகாரத்திற்குள் தொடர்கிறது. அவ்வதிகாரத்தின் 1, 14 மற்றும் 18 ஆகிய வசனங்களைக் காணவும். [4]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 144. [5]இவ்வாக்கியத்தில் "ஆல்" என்பது "ஆகையால்" என்று அர்த்தப்படுகிறது. [6]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 384, 431; W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 474, 284. [7]இவ்விடத்தில் எதிர்கால வினைச்சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதால் கிறிஸ்துவின் மறுவருகையின்போது நமது உயிர்த்தெழுதல் என்ற விஷயத்தைப் பவுல்

*தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர்; ஆனால் சந்தர்ப்பப்பொருளானது, நாம் ஞானஸ்நானத் தண்ணீரிலிருந்து எழுப்பப்படுதல் என்ற கருத்திற்கே ஆதரவாக உள்ளது. ஒருவேளை இவ்வார்த்தையானது, நாம் ஞானஸ்நானம் பெறும்போது, புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்ளும்படிக்கு உயிர்ப்பிக்கப்படுதலின் நிச்சயத்தை வலியுறுத்துவதாக இருக்கலாம்.* [8]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 176. [9]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 135. "A.D." stands for the Latin phrase Anno Domini ("in the year of [our] Lord"). [10]Adapted from Burgess, 55.

[11]Vine, 3. [12]*"விடுதலையாக்கப்பட்டிருத்தல்" என்பது "நீதிமானாக்கப்படுதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து வந்துள்ளது. நீதிமன்றத்தில் "நீதிமானாக்கப் பட்ட" ஒருவர் ("குற்றமற்றவர்" என்று கண்டறியப்பட்டவர்) விடுதலையாக்கப்படுகிறார்.* [13]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 252, n. 43. [14]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 118. [15]Vine, 445. [16]Jim Townsend, *Romans: Let Justice Roll* (Elgin, Ill.: David C. Cook Publishing Co., 1988), 44. [17]James R. Edwards, *Romans,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 164. [18]Vine, 417. *"சாவுக்கேதுவான" என்ற வார்த்தையில் பின்வரும் மறைபொருள் இருக்கலாம்: "சரீரமானது எப்படியும் மரிக்கத்தான் போகிறது, அப்படி யிருக்கும்போது சரீரத்தையும் அதன் இச்சைகளையும் பூர்த்திசெய்வது ஏன்?"* [19]*The Analytical Greek Lexicon,* 156, 197. [20]Vine, 384.

[21]*The Analytical Greek Lexicon,* 310. [22]*உடலின் பல்வேறு உறுப்புகள் பாவம் செய்வதில் எவ்வாறு பயன்படுத்தப்படக்கூடும் என்பதற்கு உதாரணங்களைக் கொடுக்க நீங்கள் விரும்பலாம்.* [23]Edwards, 165. [24]Vine, 329, *பிற்பாடுள்ள ரோமர் 6:23ன் "கூலி" என்ற வார்த்தையின்மீதான விளக்கங்களைக் காண்க.* [25]William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 87. [26]J. D. Thomas, *Romans,* The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 44. [27]Jim McGuiggan, *The Book of Romans*, Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 201. [28]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 200. [29]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 56.